தமிழ்நாடு பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (பணியாளர் தொகுதி) செயல்முறைகள்
சென்னை-6

ந.க.எண். 21243 / சி3 / இ1 / 2023 நாள்.04.10.2023

பொருள்: பள்ளிக் கல்வி 2022-23ம் ஆண்டு அலகு விட்டு அலகு மாறுதல் பள்ளிக் கல்வித் துறையில் பணிபுரியும் பட்டதாரி ஆசிரியர்கள் - பெருநகர சென்னை மாநகராட்சி துறையின் கீழ் இயங்கும் பள்ளிக்கு அலகு மாறுதலில் செல்ல விண்ணப்பித்தவர்களுக்கு கலந்தாய்வு நடைபெறுதல் சார்பாக.

பார்வை:
1)சென்னை-3 கூடுதல் தலைமைச் செயலர்/ஆணையர் பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் ந.க.எண்.இ4/இ3/1109/2023 நாள்.4.9.2023
2)சென்னை-6 பள்ளிக் கல்வி இணை இயக்குநரின் (ப.தொ) செயல்முறைகள் இதே எண்ணிட்ட நாள்.12.9.23
3)சென்னை-3 கல்வி அலுவலர், பெருநகர சென்னை மாநகராட்சி அவர்களின் கடிதம் நக.எண்.இ4/இ3/1109 2023 நாள்.29.9.2023

-0-

பெருநகர சென்னை மாநகராட்சி துறையின் கட்டுப்பாட்டின் கீழ் இயங்கும் புதிதாக சேர்க்கப்பட்டுள்ள 139 பள்ளிகளில் உள்ள 190 காலிப்பணியிடங்களுக்கு அலகு விட்டு அலகு/துறை மாறுதல் மூலம் சென்னை மாவட்டம் மற்றும் பிறமாவட்டத்தில் உள்ள ஆசிரியர்கள் பெருநகர சென்னை மாநகராட்சி பள்ளிகளில் பணிபுரிய விருப்பம் உள்ள பட்டதாரி ஆசிரியர்கள் EMIS இணையதளத்தில் 11.9.2023 முதல் 30.9.2023 வரை தங்கள் விண்ணப்பங்களை பதிவேற்றம் செய்திடுமாறு பார்வை-1ல் காணும் கடிதம் வாயிலாக தெரிவிக்கப்பட்டதையடுத்து, பார்வை-2ல் காணும் செயல்முறைகளின் வாயிலாக அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களுக்கும் தகவல் அளிக்கப்பட்டது.

தற்போது இதன் தொடர்ச்சியாக கல்வி தகவல் மேலாண்மை முகமையில் (EMIS) அலகு விட்டு அலகு மாறுதல் மூலம் சென்னை பெருநகர

மாநகராட்சி துறையின் கீழ் செயல்படும் பள்ளிக்கு மாறுதலில் செல்ல உரிய துறையின் தடையின்மைச் சான்று பெற்று (Noc) விண்ணப்பித்த பட்டதாரி ஆசிரியர்கள் மற்றும் முதுகலை ஆசிரியர்களுக்கு கீழ்க்கண்ட நிலவரப்படி கலந்தாய்வு நடைபெறும் என பார்வை-3ல் காணும் கடிதம் வாயிலாக பெறப்பட்டுள்ளது.

| நாள் | கலந்து கொள்ள வேண்டிய ஆசிரியர்கள் | இடம் | நேரம் |
|---|---|---|---|
| 11.10.2023 | இடைநிலை ஆசிரியர்கள் | பெருநகர சென்னை மாநகராட்சி Ribbon Building அம்மா மாளிகை கூட்ட அரங்கம் சென்னை-3 | காலை 10.00 to 1.00 |
| 11.10.2023 | பட்டதாரி ஆசிரியர்கள் | | மதியம் 2.00 மாலை 4.00 |
| 11.10.2023 | முதுகலை ஆசிரியர்கள் | | மாலை 4.00 5.00 வரை |

எனவே மேற்காண் சென்னை பெருநகர மாநகராட்சி துறையின் கீழ் செயல்படும் பள்ளிக்கு அலகு மாறுதலில் செல்ல EMIS விண்ணப்பித்த ஆசிரியர்கள் மேற்படி நாளில் நடைபெறும் கலந்தாய்வில் கலந்து கொள்ள தக்க வகையில் அறிவுறுத்திடுமாறு அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்களும் கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள்.

இணை இயக்குநர் (பணியாளர் தொகுதி)

பெறுநர்

அனைத்து மாவட்ட முதன்மைக் கல்வி அலுவலர்

அனைத்து மாவட்ட கல்வி அலுவலர்கள் (தொடக்கக் கல்வி) (மு.க.அ. வழியாக)

நகல்: இவ்வியக்கக W2 & W3 பிரிவு

நகல்: கல்வி அலுவலர், கல்வித்துறை, பெருநகர சென்னை மாநகராட்சி அம்மா மாளிகை, சென்னை-3 தகவலுக்காக